பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஆனி 10உ (24—6—67) சனி ★ வெளியூர் : ஆனி 11உ (25—6—67) ஞாயிறு [இதழ் : 9

## ரேஷன் கார்டும் அடகுப்பொருளாகிறது

புதுவை, ஜூன் 22—

இங்கு, ஏழைகள் தங்கள் ரேஷன் கார்டுகளைக்கூட அடகுவைக்கிறார்கள்! ஈவு இரக்கமற்ற சில அடக்குக் கடைக்காரர்கள், அந்த ரேஷன் கார்டுகளைக் கொடுத்து அவற்றிற்குரிய உணவுப் பொருள்களை வாங்கி. கள்ளச் சந்தையில் விற்கிறார்கள்!

## சட்டமன்றத்தில்...!

[போகாத நிருபர்]

வெள்ளிக்கிழமையன்று கேள்வி நேரத்தின் பெரும் பகுதி, காதல்—கலியாணம்—கட்டுப்பாடு என்ற பிரச்சினைகள் ஆக்கிரமித்திருக்கின்றன! பெண்களின் திருமண வயதில் ஆரம்பித்த உறுப்பினர்களின் கேள்விகள், குழந்தைகளைக் குறைவாகப் பெறுவதுவரை எழுப்பப்பட்டிருக்கின்றன!

சட்ட அமைச்சர் மாதவன், இலக்காக இருந்து விளக்கங்களைத் தந்திருக்கிறார். பிரச்சினை இரசனையானது என்பதனால் தானோ என்னவோ—கட்சி எல்லை கண்டுபிடிக்கமுடியாத வகையில் உறுப்பினர்கள் பலர், ஆர்வமும் ஈடுபாடும் காட்டியிருக்கின்றனர்.

பெண்களின் திருமண வயதைப் பற்றி மத்திய அரசும், மற்றும் பல தனிப்பட்ட அமைப்புகளும், ஒரு சில பத்திரிகைகளும் தெளிவு இல்லாத வாதப் பிரதிவாதங்களில் இறங்கியிருக்கும் நிலையில், பதவியேற்ற புதிதில் அண்ணா அவர்கள் சென்னை பாலர் அரங்கில் நடந்த கூட்டம் ஒன்றில் இரத்தினச் சுருக்கமான விளக்கம் ஒன்றினைத் தந்தார்கள்.

**"பெண்களின் தோற்றம் முக்கியமே தவிர வயது முக்கியமல்ல; பெண்களுக்கு உருவம்தான் வயது"**

என்று டாக்டர் சந்திரசேகரும் கலந்துகொண்ட அக்கூட்டத்தில்அண்ணா குறிப்பிட்டார்; 'A woman is as old as she looks' என்பது, அவரது ஆங்கில வாசகமாகும்.

"வயது இவ்வளவுதானா ஆகிறது? அதிகம் இருக்கும் என்றெல்லவா நினைத்தேன்?" என்று சொல்ல நேர்ந்தவர்களுக்கு மேற்கூறிய விளக்கம் எளிதில் புரியும்.

இந்த அடிப்படை புரியாமல், வெறும் 'வயதை' மட்டும் வைத்து வாதத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு போக்குக்கு அண்ணா அவர்கள் கோடிட்டுக் காட்டியிருப்பதனைப் பின்பற்றி,

**"பெண்களின் திருமண வயது, அவர்களின் உணர்ச்சி—உடற்கட்டு ஆகியவற்றைப் பொறுத்தது......... காதல் வயது கட்டுப்பாட்டுக்கு உகந்ததல்ல"**

என்று சட்ட அமைச்சர் பதிலளித்திருப்பது, தக்க விளக்கமாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

"தமிழ்ப் பண்புக்கு ஒத்துவருவதே சுயமரியாதைத் திருமணம்; தமிழ்ப் பண்புகள் இந்துமதச் சட்டங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது; எனவே, சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்டபூர்வமான ஒப்புதல் கொடுப்பது சட்டச் சிக்கல்கள் எதையும் தோற்றுவிக்காது" என்று அமைச்சர் மாதவன் எடுத்துக்காட்டியிருப்பது, 'ஆத்திகர்கள் மத்தியில்கூட சுயமரியாதைத் திருமணம், ஒரு புதிய மதிப்பினைப் பெறும்' என்று கூறும் அளவுக்கு இருக்கிறது!

அடுத்து என்ன கூறப்போகிறார் என்பதை எதிர்பார்க்காமலேயே ஓர் இடத்தில் காங்கிரசு உறுப்பினர்கள், அண்ணாவின் பதிலுக்குக் கைதட்டியிருப்பது, அவர்களைப் பரிதாபகரமான நிலையில் ஆழ்த்தியிருக்கிறது!

> **"நான் அறிந்தவரையில் முந்தைய சர்க்காரில் எந்த அமைச்சர் மீதும் இலஞ்சக் குற்றம் சுமத்தப்பட்டதாகத் தெரியவில்லை. (இந்த இடத்தில் காங்கிரசு உறுப்பினர்கள் கைதட்டியிருக்கின்றனர்); பொதுவாக முந்தைய அமைச்சரவை மீது சில குற்றச்சாட்டுக்கள் இருக்கலாம்: இதை விசாரிக்க மேல்மட்ட கமிஷன் தேவையில்லை; ஏனெனில், மக்களே தீர்ப்பளிக்கத் தகுந்தவர்கள். அந்த மக்கள், முந்தைய அரசைப் பற்றித் தங்களுடைய தீர்ப்பை வழங்கிவிட்டார்கள்." (கழக உறுப்பினர்கள் கைதட்டல்)**

**"அண்ணா அவர்கள் முழுவதும் பேசுவதற்குள், அவசரப்பட்டுக் கைதட்டிவிட்டோம்" என்பதை, மேற்கண்ட பகுதியைப் படிக்கும் காங்கிரசுக்காரர்கள் உணரட்டும்!**

"இந்த அமைச்சரவை, குறைந்தது மூன்று முறையாவது நீடிக்க விரும்புகிறவன் நான்" என்று மனமுவந்து கூறியிருக்கும் சுதந்தரா உறுப்பினர் ஆதிமூலம், நான்காவது நாள் பட்ஜெட் விவாதத்தைத் துவக்கிவைத்திருக்கிறார்.

நிர்வாகச் சிக்கனம் மட்டுமல்லாது ஆடம்பரத்தையும் உதறித் தள்ளியிருக்கும் கழக அமைச்சரவைக்குப் பாராட்டுதல் தெரிவித்திருக்கும் அவர், 'ரேஷன்—கொள்முதல் முறை வெற்றி அளித்திருப்பதனால்தான், தேர்தலுக்கு முன் இருந்த உணவு நிலைச் சீர்கேடுகள் மறைந்திருக்கிறது' என்ற உண்மையை, ஏனோ புரிந்துகொள்ள முடியாதவராக இருந்திருக்கிறார்!

மொரார்ஜியின் பட்ஜெட்டும், அண்ணாவின் நிதி நிலை அறிக்கையும் அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான்; ஆனாலும், இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கழக உறுப்பினர் வேழவேந்தன் எடுத்துக்காட்டியிருக்கும் பக்குவம் பாராட்டுக்குரியதாக இருக்கிறது:—

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழக மக்களின் தன்மான — தற்காப்புப் போராட்டம்

## சேலம் உருக்காலைக் கோரிக்கை—சட்டமன்றத்தில் ம. பொ. சி. முழக்கம்

சென்னை, ஜூன் 24—

**"சேலம் உருக்காலைக்காக நாம் போராடுவது தாக்கப்பட்ட ஓர் இனம் தற்காப்புக்காக நடத்தும் போராட்டமாகும்.**

**"உரிமைக்கு ஏற்பட்டுவிட்ட களங்கத்தை நீக்க—தாக்குதலுக்கு உள்ளான நமது தன்மானத்தைக் காக்க நடத்தும் போராட்டமாகும்.**

**"இது, தேசியத்துக்கு விரோதமானதோ ஒருமைப்பாட்டுக்குத் தடையானதோ அல்ல!**

**"சேலம் தொழிற்சாலை தட்டிக்கழிக்கப்படுவது தமிழகத்துக்குச் செய்த பெரிய அநீதியாகும்!**

**"தேசியப் போர்வையில் செய்யப்பட்ட இந்தக் கொடுமை நமது உரிமைக்கு ஏற்பட்ட களங்கம் மட்டுமல்ல—நம் தன்மானத்துக்கே நிகழ்ந்த ஒரு தாக்குதல் ஆகும்!"**

என்று, தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம், இன்று சட்டமன்றத்தில் உரிமை முழக்கமிட்டார்.

தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்றுப் பாராட்டிப் பேசிய திரு. ம. பொ. சி., சேலம் உருக்கு ஆலை குறித்து உருக்கத்துடன் [illegible] தெரிவித்தார்.

அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

"நிதியமைச்சர் அவர்கள் அளித்துள்ள இந்த வரவு-செலவுத் திட்டத்தை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஒரு சோதனை மிகுந்த கட்டத்தை மிக வெற்றிகரமாகச் சமாளித்து இத்திட்டத்தைத் தயாரித்திருக்கிறார். அதுமட்டுமல்ல; மிக நல்ல தமிழில் முதன்முதலாக அளிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டமாகும் இது.

தமிழ், ஆங்கிலத்துக்குக் குறைந்ததன்று; ஆங்கிலத்தைவிட, மிகையான வளமுடைய மொழியாகும் என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது நிதியமைச்சரின் வரவு-செலவுத் திட்ட உரை.

அரசியல்—பொருளாதார நுணுக்கங்களையும் வெளிப்படுத்தும் அழகான தமிழ்ச் சொற்களை, அவருடைய உரையில் நிரம்பக் காண முடிகிறது. அதற்காக நிதி அமைச்சரைப் பாராட்டுகிறேன்.

தமிழை ஆட்சி மொழியாக்கிச் சட்டம் நிறைவேற்றியபோது அப்போதிருந்த நிதியமைச்சர் சுப்பிரமணியம், 'இன்னும் பத்து ஆண்டுக் காலத்தில் அரசின் தலைமைச் செயலகத்திலேயே தமிழை ஆட்சிமொழியாக்கிவிடலாம்' என்றார்; ஆனால் ஆண்டு பன்னிரண்டாகிவிட்டன! துரதிருஷ்டவசமாக அவர்கள் இன்றைக்கு ஆட்சியில் இல்லை!

'தமிழ், ஆங்கிலத்துக்கு இணையானது; அதைவிட மேலானது' என்பதற்குச் சிறந்த சான்றாக நிதி நிலை அறிக்கை திகழ்கிறது! இப்போதே வேண்டுமானாலும் கூட, 'தமிழக அரசின் தலைமைச் செயலகம்' என்ற பெயர்ப் பலகையின் கீழுள்ள இந்த செகரட்டேரியட்டில்கூட தமிழை ஆட்சி மொழியாக்கிவிட ஆணை பிறப்பித்துவிடலாம்.

இது, 'மாநில அரசு' என்பதைவிட 'மானிய அரசு' என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

வெறும் மானியம் பெற்று நடைபெற்றுவரும் இந்தக் காலத்தில், இப்படிப்பட்ட ஒரு வரவு-செலவுத் திட்டத்தை, கடந்த இருபது ஆண்டுக்காலத்தில் தயாரித்ததில்லை என்று கூறும்படியாகத் தயாரித்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இதிலுள்ள மற்றொரு சிறந்த அம்சம் என்னவென்றால், மாநில அரசுக்கு உள்ள பலவீனங்கள் அனைத்தையும் கொஞ்சம்கூட ஒளிக்காமல் சரியாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் நமது முதலமைச்சர்!

மத்திய அரசு தலையீடு—குறுக்கீடு—'பணமில்லை' என்று கூறும் தடைகள், முட்டுக்கட்டைகள், ஆகிய அத்தனையையும் எடுத்துக்காட்டி, ஆக்கவழியில் ஆலோசனை கூறுவதாகவும் இந்த வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை எதிர்க் கட்சித் தலைவரும்—உறுப்பினர்களும்கூட ஆதரிக்க வேண்டும்; ஏனெனில், எதிர்காலத்தில் அமையக்கூடிய எந்த ஆட்சிக்கும் உரிமை கிடைக்கச் செய்வதற்கான வழிகாட்டியாக இது அமைந்துள்ளது.

அரிசி விலைக்குறைப்புக்காக கேட்ட உதவியை மொரார்ஜி தேசாய் நிராகரித்துவிட்டார். நாம் கேட்டது நியாயமல்ல என்று அவர் கூறவில்லை; இதைப்போல் மற்ற மாநிலங்களும் கோருமே என்பதற்காகவும், மத்திய அரசில் போதிய பண வசதி இல்லை என்பதற்காகவும் தான், 'கொடுக்க இயலவில்லை' என்று அவர் கூறினார்; இப்படிச் சொல்வது தட்டிக்கழிக்கும் போக்காகும்.

உதவி கொடுக்கவில்லையென்றாலும் வட்டி வசூலுக்காவது வாய்தா [illegible] அடிப்படையில் அமையவில்லை.

இன்றைக்கு மத்திய அரசு முக்கிய அதிகாரங்களைத் தானே வைத்துக் கொண்டு—மிச்ச அதிகாரங்களை மாநிலத்துக்குக் கொடுத்து-கொள்ளை அதிகாரங்களை தானே வைத்துக்கொண்டு நிமிர முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது! எனவே இந்த அதிகாரங்கள் மாநிலங்களுக்கு மாற்றப்பட்டாக வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பு—அயல் நாட்டுத் தொடர்பு — உள்நாட்டுப் போக்குவரத்து ஆகிய துறைகளைத் தவிர மற்ற அனைத்து அதிகாரங்களையும் மாநிலங்களுக்கு ஒதுக்கிவிட வேண்டும்.

எல்லா அதிகாரங்களையும்தானே வைத்துக்கொண்டு — மாநில அரசின் தேவைக்கு நிதி தர

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜூலை 23

# சேலம்-தூத்துக்குடி நாள்

## கழக அமைப்புகளுக்கு தலைமைக் கழக வேண்டுகோள்

**சேலம் இரும்பாலை, தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் பற்றிய தமிழகக் கோரிக்கைகளின் நியாயத்தை மத்திய அரசுக்கு மேலும் வலியுறுத்தும் வண்ணம், ஜூலை 23-ல் நாடெங்கும் தமிழக மக்களின் ஒருமித்த குரலை எழுப்ப—**

**சேலம்—தூத்துக்குடி நாள் கொண்டாடுவீர்!**

[ஏனைய விவரம் பிறகு அறிவிக்கப்படும்]

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

இரா. செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1998 ஆனி 10 (24—6—67) சனி

# சிறந்த திட்டம்

(1)

"நாங்கள் நிர்வாகத்துக்குப் புதியவர்களாயிருக்கலாம்; ஆனால் 'சமூக நீதி'யின் அடிப்படையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர்கள்; சேமிப்பு, சிக்கனம் ஆகிய நற்பண்புகளை என்றுமே வலியுறுத்தி வந்திருக்கும் தமிழகத்தின் பழம்பெரும் பண்பாட்டின் வழி வந்தவர்கள்.

"நீதி நிர்வாகத்தில் ஒழுங்கு பற்றிப் பெரிதும் பேசப்பட்டுவரும் இந்நாளில், இந்த அடிப்படை நற்பண்புகளை இன்னும் தொடர்ந்து கைக்கொண்டு வருபவர்களது முயற்சிகள் உரிய இடங்களில் உணர்ந்து பாராட்டப்படவேண்டும். நியாயமான அளவு செலவுப் பொறுப்பிற்குள்ளேயே, மக்களுக்கு நலம் பயக்குமென நாம் கருதுகின்ற எல்லாத் துறைகளிலும் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளோம். பயனில் செலவினைக் குறைக்கும் முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருவோம். நிதி வசதிகளைப் பேணிப் பெருக்குவோம்."

தமிழக அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தின் தொடர்பாகத் தாம் ஆற்றியுள்ள விரிவான விளக்க உரையில், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற கழகத்தவர் எத்தகைய இலட்சியத்தைக் கொண்டிருப்பவர்கள் என்ற பேருண்மையை, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அழுத்தந்திருத்தமாக எடுத்துக்காட்டி இருக்கின்றார். கழகத்தின் விழுமிய இலட்சியம் பற்றிச் சுருக்கமாக ஆனால் மிக மிகத் தெளிவாக—சராசரி அறிவு பெற்றிருப்பவர்களும் புரிந்து கொள்ளத்தக்க வகையில் அண்ணா அவர்கள் அறிவித்திருக்கின்றார்.

இன்றைய சமுதாயத்தைச் சேர்ந்த பெரும் தொகையினரான ஏழை—நடுத்தர மக்களின் இன்னல்களைத் துடைத்திடவும், புதிய வாழ்வைத் தேடித் தரவும் தமிழக அரசுக்குள்ள அக்கறையையும் ஆர்வத்தையும் அனைவரும் அறிந்துகொள்ளத் தக்கவகையில், பயனுள்ள பல செயல்முறைகளை முதலமைச்சர் அவர்கள், இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வகுத்தளித்திருக்கின்றார்.

அண்ணா உருவாக்கி இருக்கின்ற இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பெரிதும் விவசாயத்திற்கே முதலிடம் தரப்பட்டிருக்கிறது. திட்டமிட்ட பொருளாதார ஏற்பாடு செம்மையாக வளர்ச்சி பெற்று, எதிர்பார்க்கப்படுகின்ற கால அளவுக்குள் நல்ல விளைவினைத் தரவேண்டுமானால், அதற்கு அடிப்படையாக இருப்பது விவசாயப் பண்டங்களின் உற்பத்திப் பெருக்கமே ஆகும். இப் பொருளாதார உண்மையைத் தெரிந்திருக்கின்ற நமது முதலமைச்சர், விவசாய வளர்ச்சிக்கு இன்றியமையாத் துணையாக இருந்திடக் கூடிய உணவுப் பண்டச் சாகுபடி ஏற்பாட்டிற்கும், மின்சாரப் பெருக்க ஏற்பாட்டிற்கும் சிறப்பிடம் தந்திருக்கின்றார்.

உணவு உற்பத்தியை இரட்டிப்பாக்குவதற்காக ஒரு போகம் மட்டுமே பயிர் செய்யப்படக்கூடிய நீண்டகாலப் பயிர் செய்யப்படும் அளவைக் குறைத்து, அவ்வாறு குறைக்கப்படும் பெரும் நில அளவில் இரண்டு போக குறுகிய கால நெற்பயிரைப் பயிரிட ஏற்பாடு செய்திருப்பதன் வாயிலாக, நெல் உற்பத்தியை இரண்டு மடங்காக்க அரசாங்கம் வகைசெய்திருக்கிறது.

இத்தொடர்பில், பாசன வசதியைக் கூடுதலாக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனம் என்பது, ஏரி—ஆற்றுக்கால் ஆகிய இரண்டுடன் மட்டும் இருந்துவிடக்கூடியதல்ல; இறைவைப் பாசனமும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஏரி—ஆற்றுப் பாசனத்துக்குத் தட்டுப்பாடு ஏற்படுகின்ற காலத்தில், அத்தட்டுப்பாட்டை இறைவைப் பாசனத்தின் மூலமாகத்தான் நிறைவு செய்தாக வேண்டும். எனவே, இறைவைப் பாசனத்துக்குத் தேவையாக இருப்பது மின்சார—எண்ணெய் இறைவை இயந்திரங்களாகும்,

நெல் உற்பத்தியை இரட்டிப்பாக்கும் அரசாங்க ஏற்பாட்டில் முதலிடம் பெற்றிருக்கின்ற தஞ்சை கழிமுகப் பகுதி விவசாயத்திற்கும், மற்றப் பகுதிகளில் தேவைப்படக்கூடிய அளவுக்குத் தேவை இருக்காது என்றாலும், குறைந்தபட்ச இறைவைப் பாசன வசதி கட்டாயமாகிறது. இதற்கு, மின்சாரம் இன்றியமையாததாகும்.

இதுபற்றி முதலமைச்சர் அவர்கள் தமது நிதி நிலை அறிக்கையில், விரிவாகவும் விளக்கமாகவும் குறிப்பிட்டிருக்கின்றார். அதே நேரத்தில், அம்மாவட்டத்திலிருக்கின்ற மூன்று தனியார் துறை மின்சார உரிமங்களை அரசாங்க உடைமை ஆக்கிக்கொண்ட நற்செய்தியையும், அதற்குரிய காரணத்தையும் தெளிவாக்கியிருக்கின்றார்.

"தஞ்சாவூர் கழிமுகப் பகுதியில் உணவுத் தானிய உற்பத்தியைப் பெருக்கும் நமது திட்டம், இறைவைப் பாசனத்துக்கு வேண்டிய மின்சார வசதியை நீட்டித் தருவதில் ஏற்பட்ட முன்னேற்றக் குறைவால் பெரிதும் தடைப்பட்டுள்ளது.

"ஆதாய நோக்கத்தையே பெரிதும்கொண்ட தனிப்பட்ட மின்சாரம் வழங்கும் உரிமை பெற்றவர்களின் பொறுப்பில் இம்மாவட்டத்தின் பெரும் பகுதி உள்ளதால், வேளாண்மைப் பணிகளுக்காக மின்சார வசதியை விரிவாக்குவதில் அவர்கள் ஆர்வமுடையவர்களாக இல்லை.

"கடந்த இரண்டாண்டுகளாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் மின்சாரம் வழங்கும் உரிமை பெற்றவர்களுக்குக் கடன்கள் வழங்குவதன் மூலம், கிராமங்களுக்கு மின்சார வசதியைப் பெருக்குவதற்காக அரசு மிகவும் முயன்று வந்துள்ளது; ஆனால், இதுவரை கண்டுள்ள முன்னேற்றம் கணிசமானதாக இல்லை.

"உணவு உற்பத்தியின் பொருட்டு, வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கும், கிணறுகளுக்கும் மின்சாரம் வழங்கும் அமைப்பை விரிவாக்கி, அதன்மூலம் இருபோகம் விளைவித்தலைப் பெருக்க, மாபெரும் திட்டமொன்றை மெற்கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாதது என அரசு உணருகிறது.

"எனவே, தஞ்சை மாவட்டத்தில் இயங்கிவருகின்ற கும்பகோணம் மின்சார வழங்கும் உரிமம் (1930), நாகப்பட்டினம் மின்சார வழங்கும் உரிமம் (1933), மாயவரம்—மன்னார்குடி—திருவாரூர் மின்சார வழங்கும் உரிமம் (1933)—ஆகிய மூன்று தனிப்பட்டோர் உரிமங்களையும், காலதாமதம் ஏதுமின்றி மேற்கொள்ள வேண்டும் என அரசு முடிவுசெய்துள்ளது."

நீண்டகாலக் கோரிக்கை இது; ஆனால், இன்றுவரை அக்கோரிக்கை நிறைவேற்றப்படாமலே இருந்துவந்திருக்கிறது. இப்பொழுதுதான் அக்கோரிக்கை, தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

—கா. க.

# புதிதாக 9 சிமெண்டுத் தொழிற்சாலைகள்

## தமிழகத்தில் ஏற்படுத்த அரசு திட்டம்

சென்னை, ஜூன், 23—

"செங்கற்பட்டு மாவட்டத்தில் சிமெண்டுத் தொழிற்சாலையோ, சர்க்கரைத் தொழிற்சாலையோ ஏற்படுத்தும் வாய்ப்பு இல்லை"

என, கே. விநாயகத்தின் கேள்விக்கு, தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பதிலளித்தார்.

சிமெண்டுத் தொழிலுக்கு தேவையான மூலப் பொருளான கண்ணாம்புக்கல் அந்த மாவட்டத்தில் இல்லை என்றும், ஏற்கனவே படாளத்தில் உள்ள சர்க்கரை ஆலைக்கே போதிய கரும்பு இல்லை என்றும் இனி மேற்கொண்டு ஒரு சர்க்கரை ஆலையை நிறுவுவது வசதியாக இருக்காது என்றும் அமைச்சர் கூறினார்.

புதிதாக 9-சிமெண்டுத் தொழிற்சாலைகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்றும், தஞ்சை மாவட்டத்தில் மேற்படி தொழிற்சாலையை நிறுவ வசதி இல்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# உணவு நிலைமை கடுமையாகிறது!

## ஆஸ்திரேலியாவுக்கு இந்தியா வேண்டுகோள்

புதுடில்லி, ஜூன் 23—

மேலை நாடுகளிலிருந்து சூயஸ் கால்வாய் வழியாக இந்தியாவுக்கு உணவுத் தானியம் கொண்டுவரும் கப்பல்கள் வரமுடியாமல், நன்னம்பிக்கைமுனை வழியாகச் சுற்றுப் பாதையில் வருவதால், உணவு நெருக்கடி கட்டுக்கடங்காமல் போவதைத் தடுத்து நிறுத்த உடனே கோதுமை அனுப்பி உதவுமாறு ஆஸ்திரேலியாவுக்கு இந்திய அரசு, அவசர வேண்டுகோள் ஒன்றை அனுப்பியிருக்கிறது.

மற்ற நாடுகளுக்கு அனுப்புவதற்காக ஆஸ்திரேலியத் துறைமுகங்களில் கோதுமை ஏற்றப்பட்டுள்ள கப்பல்களையெல்லாம் இந்தியாவுக்குத் திருப்ப ஏற்பாடு செய்யுமாறு கான்பெர்ராவிலுள்ள இந்தியத் தூதுவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

# திருத்துறைப்பூண்டியிலிருந்து திருச்சிக்கு விரைவு பஸ்

சென்னை, ஜூன் 23—

"திருத்துறைப்பூண்டியிலிருந்து திருச்சிக்கும், சென்னைக்கும் விரைவு பஸ் விடுவது பற்றி யோசிக்கப்படும்"

என்று பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி, திரு. ந. தர்மலிங்கத்தின் கேள்விக்குப் பதிலளித்தார்.

# மத்திய அரசின் போக்கு மாறவில்லை—கசப்புணர்ச்சி மேலும் வளரவே வழிகோலுகிறது!

நமது பொருளாதாரத்தின் இன்றைய நிலையில், தொழில் துறையில் பற்பல புதிய திட்டங்களைத் தொடங்குவதைவிட ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்களைச் சீர்செய்வதே நலம் பயக்கும் செயலாகும்.

இவ்விதச் சூழ்நிலையில், திட்டத்தில் தொழில்களுக்காகச் செய்துள்ள முதலீட்டினை, 1966—67-ன் திருத்த மதிப்பீடான ரூ. 5.99 கோடியிலிருந்து, ரூ. 7 கோடிக்கு இப்போது உயர்த்தியிருப்பதற்கு விளக்கம் சிறிது தேவைப்படுகிறது.

இவ்வுயர்வு, பெரிய—நடுத்தரத் தொழில்களின்கீழ் நாம் மேற்கொண்டுள்ள இரு பெரிய திட்டங்களான இராசபாளையம் சிமெண்டுத் தொழிற்சாலைத் திட்டம், அரக்கோணம் தொடர் வார்ப்படத் தொழிற்சாலைத் திட்டம் (Continuous Casting Plant) ஆகியவற்றின் தேவைகளையே எதிரொலிக்கிறது.

இராசபாளையம் சிமெண்டுத் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் இயந்திரங்களை வரவழைப்பதற்கான ஏற்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளன. கட்டிட வேலைகள், சுண்ணாம்புக் கற்சுரங்க வேலைகள் இவற்றையும் மேற்கொண்டுள்ளோம்.

தொடர் வார்ப்படத் தொழிற்சாலையைப் பொறுத்தமட்டில், இரஷ்யத் தொழில் உடனுழைப்பாளர்கள் (Soviet Collaborators) வழங்கியிருக்கும் திட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள இயந்திரத் தேவைகளையும், நாணயமாற்று வீதம் குறைக்கப்பட்டதன் விளைவையும் கருத்தில் கொண்டு, இத்திட்டத்திற்கான திருத்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இரஷ்யத் தொழில் உடனுழைப்பாளருடன் இத்திட்டம் குறித்த உடன்பாட்டில் இப்போதுதான் கையொப்பம் இட்டுள்ளோம்.

இதுபோன்றே, ருமேனிய நாட்டுக் கூட்டு முயற்சியின் துணைபெற்று மற்றொரு பெரிய தொழிற் திட்டத்தைத் துவக்கும் முயற்சியில் அரசு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது; இதுபற்றி மத்திய அரசிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது; ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர, இவ்வாண்டுத் திட்டத்தில், மின்னணுத் (Electronic) தொழில்களுக்கும், மருந்துத் தொழிலுக்கும், அளவைக் கருவிகள் தயாரிக்கும் தொழில்களுக்கும், அவ்வத் தொழில்களுக்குரிய தொழிற்பேட்டைகளை (Functional Industrial Estates) நிறுவும் பணியைத் தொடங்கி வைக்கவும் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

நிலங்களைக் கைவசப்படுத்தி—வேண்டிய வசதிகளுடன் மேனிலைப்படுத்தி, அவற்றைத் தொழிலதிபர்களுக்கு ஒதுக்கும் திட்டத்துக்கென ரூ. 25 இலட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதனத்திற்கு உதவித் தொகை வழங்குவதற்கெனவும் தற்போதைய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ. 20 இலட்சம் வகைசெய்யப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சிக்குத் தூண்டுதல் அளிக்கும்வகையில், நேரடியாக முதலீடு செய்வதற்கான வாய்ப்பு மாநிலத் திட்டத்தில் குறைவாகவே உள்ளது.

நான்காம் திட்ட வரைவின் மொத்த அளவு ரூ. 28,750 கோடியாயிருப்பினும், மாநிலத் திட்டங்கள் அனைத்திற்கும் சேர்ந்து தொழில் துறையில் ஒதுக்கக் கருதியிருந்த தொகை ரூ. 178 கோடியாகும். ஆயினும் பெருந் தொழில்களுக்கும், சுரங்கத் தொழில்களுக்கும் மத்திய அரசுத் திட்டத்தில் வகைசெய்துள்ள நிதி ஒதுக்கம் ரூ. 3,751 கோடியாகும்.

இப்பெரும் நிதி ஒதுக்கத்தை, மாநிலங்களிடையே ஒரு சீரான—நேரான அடிப்படையில் வழங்கினாலொழிய, மண்டலத் தொழில் வளர்ச்சி சமநிலையில் அமைய முடியாது.

மத்திய அரசு மேற்கொள்ளும் போக்குக் காரணமாக, மாநிலங்களில் தொழில் வளர்ச்சியில் சமநிலை அமைய முடியாதிருப்பது குறித்துப் பொருளாதார விற்பன்னர்கள் பன்முறை இடித்துரைப்பினும், போக்கு மாற்றப்படாமலிருப்பது, இம்மாநில மக்கள் மனதில் இருந்துவரும் கசப்புணர்ச்சியை மேலும் மூட்டிவிடுவதாக இருக்கிறது.

நமது மாநிலத்தில், மத்திய அரசுத் துறையின் தொழில் திட்டங்களுக்கான முதலீடுகள் ரூ. 100 கோடிக்கும் குறைவாயிருக்குமென்பது மிக்க வருத்தந் தரும் செய்தியாகும். இத்தொகை நமக்கு முற்றிலும் போதாது. மத்திய அரசு செய்யும் முதலீடுகளில் நியாயமான பங்கினைப் பெறுவதற்காகவே, நெய்வேலி—சேலம் உருக்காலையை நிறுவும்படி வற்புறுத்திவருகிறோம்.

—தமிழக அரசின் 1967—68-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில்

# சட்டமன்றத்தில் ஆசிரியர்கள் தொகுதி

## முதலமைச்சர் பதில்

சென்னை, ஜூன் 22—

"சட்டமன்றத்தில் ஆசிரியர்கள் தொகுதியை நீக்கவேண்டாம் என்று இந்திய அரசுக்குச் சிபாரிசு செய்யும்படி முறையீடுகள் எதுவும் வரவில்லை; ஆயினும், ஆசிரியர்கள் சட்டமன்றத்தில் இடம் பெறவேண்டும் என்றே கருதுகிறேன்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

# சிறிய நீர்ப்பாசனங்களுக்கு சிறப்பான ஏற்பாடுகள்

## ஆர்வமுடன் தொடர்ந்து ஆவன செய்வோம்!

நடப்பு ஆண்டிற்குரிய நமது திட்டத்தைத் தயாரிக்கையில், சிறு பாசனத் திட்டங்களின் சிறப்பினைப் பற்றியும் நாம் நன்கு உணர்ந்துள்ளோம்.

ஏரிகளையும், ஏனைய சிறு பாசன ஆதாரங்களையும் புதுப்பிப்பதோடு கூடவே, கிணறுகள்—துளைக் கிணறுகள்—வடிமுனைக் குழாய்க் கிணறுகள் ஆகிய இவற்றைத் தோண்டுவதிலும், இன்று கடைபிடித்துள்ள விரைவு சிறிதும் நெகிழாமல் அரசு பார்த்துக்கொள்ளும்.

இறைவைப் பாசனத்திற்குக் கூடுதல் மின்சாரவசதி அளிப்பதன் வாயிலாக இத்திட்டத்திற்கு மேலும் ஆக்கம் அளிக்கப்படும்.

கிணறுகள் தோண்டக் கடன் வழங்குவதற்கென சமுதாய வளர்ச்சித் தலைப்பிலிருந்து ஒதுக்கப்படும் ரூ. 233 இலட்சமும், மத்திய நில அடமான வங்கியின் கடன் பத்திரங்களில் அரசு முதலீடு செய்யப்படக் கூடிய தொகையான 1 கோடியே 50 இலட்சம் ரூபாயும் சேர்த்து நடப்பு ஆண்டில் சிறு பாசனத் திட்டங்களுக்காக 11 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படும்.

கிராம மின்சாரத் திட்டத்திற்காக, இடைக்காலத் திட்டத்தில் வகை செய்திருந்த ரூ. 4 கோடி நிதி ஒதுக்கத்தை, ரூ. 6 கோடி அளவிற்கு இப்போது உயர்த்தியுள்ளோம்.

இன்றையச் சூழ்நிலையில், தேவைப்படுவதைவிடக் குறைந்த அளவுக்கே இவ்வாண்டில் திட்டத்தின்கீழ் தொகை ஒதுக்கப்பட்டுள்ளதை அரசு உணர்ந்துள்ளது.

ஒருபோக நன்செய் நிலங்களை இருபோக வயல்களாக மாற்றுவதற்கான ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அறிக்கை ஒன்று அனுப்புமாறு உணவு உற்பத்தி ஆணையரைக் கேட்டிருந்தோம். சிறு பாசனத் திட்டங்களுக்குக் கூடுலதலாக நிதி ஒதுக்கீடு செய்து, குறுகிய காலப் பயிரின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான சாத்தியக்கூறுகளைப் பற்றி அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நான்காம் திட்டக் காலத்தில் 62,500 கிணறுகள் தோண்டுவதாக முதலில் திட்டமிட்டிருந்தோம்; ஆனால், உணவு உற்பத்தி ஆணையர் தமது அறிக்கையில், 1½ இலட்சம் கிணறுகளுக்கு மேல் தோண்ட வேண்டுமென்று கருதுகிறார்.

இவ்வாறே 8,300 தனியார் குழாய்க் கிணறுகளுக்குப் பதிலாக 11,250 கிணறுகளைத் தோண்டவேண்டுமென்றும், பொதுத் துறையில் 50 குழாய்க் கிணறுகளுக்குப் பதிலாக 500 கிணறுகள் தோண்ட வகை செய்யப்படவேண்டுமென்றும் அவர் கருதுகிறார்.

இங்ஙனமே, வடிமுனைக் குழாய்க் கிணறுகள் திட்டத்தையும், எண்ணெய்ப் பொறிகள், மின்சார விசையேற்றங்கள் இவற்றை வழங்கும் திட்டத்தையும் விரிவுபடுத்தவேண்டுமெனப் பரிவுரை கூறியுள்ளார்.

திட்டத்தில் வகை செய்திருக்கிற தொகைகளுக்குமேல் நடப்பு ஆண்டில் ஏறக்குறைய ரூ. 20 கோடி அளவிற்கு முதலீடு செய்திடின், மாநிலத்தின் உணவு உற்பத்தியும், அதன் விளைவாகக் கிடைத்திடும் வளமும் மகிழத்தக்க அளவினதாக்கும் என்பது உறுதி.

ஆனால், இம்மாபெரும் திட்டத்தை, மாநில அரசு வரையறைக்குட்பட்ட தனது நிதி வசதியைக் கொண்டு செயல்படுத்த இயலாது வெளிப்படை.

சிறு பாசனத் திட்டத்தின் சிறப்பியல்பையும், பயன் அளிக்கும் பெற்றியையும் உணர்ந்து, பெரும் அளவில் நிதி உதவியளிப்பதுடன், மாநில அரசின் இத்திட்டத்தை ஆதரிக்க இந்திய அரசு முன்வருமென்று எதிர்பார்க்கிறோம்.

சிறு பாசனத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான சிறப்பு ஏற்பாடுகளை உருவாக்குவது குறித்து ஆர்வமுடன் தொடர்ந்து ஆவன செய்வோம்.

### எளிய முறையில் உழவர்களுக்கு உதவி

உழவர்களின் தேவை அறிந்து, எளிய முறையில்—உரிய காலத்தில்—கடனுதவி தந்திடும் அமைப்புகளும், அரசு வகுத்துள்ள ஏற்பாடுகளும் ஏற்கனவே பல உள்ளன என்றாலும், மற்றுமோர் புதிய அமைப்பு ஏற்படுவது உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணை அளிக்கும் என்ற நோக்கத்துடன், 'வேளாண்மை வளர்ச்சி அமைப்பு' என்ற நிறுவனம் அமைத்திடின் அதனிடம் ரூ. 10 கோடி வரை தந்திட இயலும் என்று அமெரிக்க போர்டு (Ford) அற நிலையத்தார் தெரிவித்துள்ள கருத்துக் குறித்து அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

### புதுக்கோட்டையில் செயல்முறைத் திட்டம்--- நீலகிரியில் சீரமைப்புத் திட்டம்

புதுக்கோட்டைப் பகுதியில், குடுமியாமலை என்ற இடத்தில் 3,500 ஏக்கர் பரப்பளவு உள்ள இடம், ஒரு முதல்தரமான விவசாயப் பண்ணையாவதற்கான கூறுகள் நிரம்ப உள்ளன என்பது பற்றி சில ஆண்டுகளுக்கு முன்பு கண்டறியப்பட்டதெனினும், மேற்கொண்டு செயல்முறை எதுவும் வகுக்கப்படவில்லை.

இவ்வரசு, இத்திட்டத்தை செயல்படுத்த ஆர்வம் கொண்டுள்ளதுடன், இரஷ்ய உடன் உழைப்புத் திட்டம் கிடைத்திடுவதற்கான வழிவகையினை ஆராய்ந்திடத் தீர்மானித்திருக்கிறது.

நீலகிரி மாவட்டத்தில், இந்திய-ஜெர்மன் கூட்டு முயற்சியாக உருளைக் கிழங்கு உற்பத்திச் சீரமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு, அது குறித்த செயல் முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

### பாசனத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி--- நிலைமையறிந்து பின்னர் உயர்த்தப்படும்

பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்திற்காகவும், ஏனைய நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காகவும் போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மணிமுக்தா நதித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிற வேகத்தை ஒட்டி, நடப்பு ஆண்டில் அதற்குரிய முதலீடு உயர்த்தப்பட்டுள்ளது.

இன்னும் வேலை தொடங்கவிருக்கும் கடானா, இராமநதித் திட்டங்கள், வைகைக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டம் போன்ற புதிய திட்டங்களுக்கும் சிறிய அளவில் ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.

நிதி வசதி கிட்டும் நிலையையும், செலவின் விரைவுப் போக்கினையும் ஒட்டி, இந்த நிதி ஒதுக்கங்கள் பின்னர் உயர்த்தப்படும்.

நடப்பு ஆண்டில் நிதி நிலைமையில் ஏற்பட்டுள்ள கடுமையான இறுக்கத்தின் காரணத்தால், புதிய பாசனத் திட்டங்களை மேற்கொள்ளுவதற்குமுன், ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்களை முடிக்கவேண்டுமென்று திட்டக் குழுவும் வற்புறுத்தி வந்துள்ளதைக் கருத்தில் கொண்டும், நடப்பு ஆண்டில் நிதி நிலைமையில் ஏற்பட்டுள்ள கடுமையான இறுக்கத்தைக் கணக்கில் கொண்டும் செயல் முறை வகுக்கப்பட்டுள்ளது.

### மின்சாரத் திட்டங்களுக்குச் சிறப்பான ஏற்பாடு

மின்சார உற்பத்தி-அனுப்பல்-வழங்கல் இவை குறித்த திட்டங்களுக்காக ரூ. 30 கோடியே 60 இலட்சம் அல்லது நடப்பு ஆண்டிற்கென திட்ட அளவில் 35 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்போது நிறைவேற்றப்பட்டுவரும் மிக முக்கியத் திட்டமான எண்ணூர் அனல் மின்சாரத் திட்டத்திற்கு ஏறக்குறைய ரூ. 10 இலட்சம் ரூபாயும், கோதையாறு நீர் மின்சாரத் திட்டத்திற்கென 3 கோடியே 18 இலட்சம் ரூபாயும், 'பேசின் பிரிட்ஜ்' அனல் மின்சாரத் திட்டத்திற்காக 1 கோடியே 75 இலட்சம் ரூபாயும் இந்த வரவு—செலவுத் திட்டத்தில் நிதி வகை செய்யப்பட்டுள்ள சிறப்பான ஏனைய இனங்களாகும்.

நடப்பு ஆண்டில் நிறைவு பெறும் வேலைகளின் மூலம் தமிழக மின்சார இணைப்பின் (Madras Grid) உற்பத்தித்திறன், 160 மெகாவாட் அளவிற்கு உயரும் என எதிர்பார்க்கிறோம்.

—தமிழக அரசின் 1967—68-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில்

---

## பள்ளியாசிரியர் நலனுக்கான சிறப்புத் திட்டம்

### குடியிருப்பு --- மருத்துவ வசதிகள் கிடைக்க ஏற்பாடு---தமிழக அரசு பரிசீலிப்பதாகத் தகவல்

சென்னை, ஜூன் 23—

அரசாங்கப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் பணியாற்றுகிற சம்பளம் குறைந்த ஆசிரியர்களின் வாழ்க்கைச் சங்கடங்களைத் தணிக்கும் சிறப்புத் திட்டமொன்றைத் தமிழக அரசு வகுத்து வருகிறது.

இத்திட்டப்படி ஆசிரியர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும், மாநில வீட்டு வசதிக் கழகம் —சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள மாநில சுகாதாரத் திட்டம் ஆகியன வழியாக வீட்டு வசதியும், மருத்துவ வசதிகளும் கிடைக்கும்.

அரசாங்க, உள்ளாட்சி மன்றப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மட்டும் வீட்டு வாடகைப் படியும், மருத்துவச் செலவும் இப்போது கிடைத்துவருகின்றன; ஆனால் அரசாங்க உதவி பெற்று நடந்துவரும் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு அவை கிடைப்பதில்லை.

"தமக்குச் சிறந்த வாழ்க்கைச் சூழல் வேண்டுமென்று கோரி வரும் தமிழக ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு, இத்திட்டங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டியிருக்கும் என்பதை அறிந்துகொள்வதற்காக அரசாங்கம், அண்மையில் அமைத்த பல்வேறு குழுக்கள், இப்போது இத்திட்டத்தை வகுத்துவருகின்றன"

என்று தமிழகக் கல்வி அமைச்சக அதிகாரி ஒருவர் கூறினார்.

"ஆலோசிக்கப்பட்டுவரும் இத்திட்டம் செயலுக்கு வந்தவுடன், ஆசிரியர்களின் நலனுக்காக நடந்துவரும் ஏனைய திட்டங்கள் நிறுத்தப்படும்"

என்று மற்றொர் அதிகாரி கூறினார்.

இப்பெரிய திட்டம், தமிழகம் முழுவதிலுமுள்ள பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் பொருந்தும் வகையில் போடப்படுகிறது.

ஆரம்பத்தில் இப்புதிய திட்டத்தை ஆசிரியர்களின் பிரச்சினைகள் பெரிதும் ஆழமாயிருக்கும் பெரிய நகரங்கள் அனைத்திலும் கொண்டுவர அரசாங்கம் கருதுகிறது. குடியிருப்பு, மருத்துவ வசதி ஆகிய இரண்டையும் அளிக்கும் திட்டத்தினால் தமிழக அரசிற்குச் சுமார் ரூ. 2 கோடி செலவாகலாம்.

இத்திட்டம் பற்றிய விவரங்கள் இன்னும் முழுமையாக வகுக்கப்படவில்லையெனினும், மாநில வீட்டு வசதிக் கழகம் புதிதாக வாங்கும் நிலங்களில், பள்ளிகளுக்கு அருகிலேயே ஆசிரியர்களுக்கு வசதியுள்ள வீடுகளைக் கட்டித் தருவதென்று தமிழக அரசு கருதியிருக்கிறது.

மருத்துவ வசதிகளைப் பொறுத்தவரையில், ஆசிரியர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் என்றே தனியாகப் புதிய மருத்துவமனைகளைத் திறக்கலாம்; இப்போதிருந்துவரும் முறைப்படி ஆசிரியர்களின் மருத்துவச் செலவிற்காகும் பணம் திருப்பித் தரப்படுகிறது; ஆனால் புதிய திட்டப்படி மேற்சொன்ன மருத்துவமனைகளில் ஆசிரியர்களுக்கு இலவசமாக மருத்துவம் பார்க்கப்படும்; குறைந்த விலையில் மருந்துகள் தரப்படும்.

தமிழக அரசு இதற்கு நிதி—தொழில் நுட்ப உதவி ஆகியவற்றை மத்திய அரசிடம் கேட்டிருக்கிறது; ஆசிரியர்களுக்கான இப்புதிய திட்டம் நல்ல முறையில் செயல்படுவதற்காகப் பொது—தனியார் துறைகளிலுள்ள பள்ளிகளின் தலைமை ஆசிரியர் அனைவரிடமிருந்தும் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது.

---

## தமிழகத்தில் வறட்சி பகுதிகள்

### பார்வையிடக் குழு அமைப்பு

சென்னை, ஜூன் 23—

"தமிழ்நாட்டில் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிடக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது; அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் அவையின்முன் வைக்கப்படும்".

என்று சட்டமன்றத்தில் உணவுத் துறையமைச்சர் கே. ஏ. மதியழகன் தெரிவித்தார்.

"திருத்துறைப்பூண்டி — வேதாரண்யம் பகுதியையும், அறந்தாங்கிப் பகுதியையும் வறட்சிப் பகுதிகளாக அறிவிப்பதுபற்றிப் பரிசீலிக்கப்படும்" என்றார்.

"கிழக்கு இராமநாதபுரம் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்கவேண்டும் என்ற சீமைச்சாமியின் கோரிக்கையும் அனுதாபத்துடன் கவனிக்கப்படும்" என்று முதலமைச்சர் அண்ணா கூறினார்.

---

## பெண்கள் திருமண வயது உயருமா?

### அமைச்சர்தரும் பதில்

சென்னை, ஜூன் 23—

"பெண்களின் திருமண வயதை உயர்த்தும் உத்தேசம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை"

என்று சட்டமன்றத்தில் அமைச்சர் செ. மாதவன் அறிவித்தார்.

அவர் மேலும் சில கேள்விகட்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"குடும்பக் கட்டுப்பாட்டின் அடிப்படையில் திருமண வயது வரம்பை உயர்த்துவது பற்றி மத்திய அரசு யோசிப்பதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கும்போது மாநில அரசின் யோசனை கேட்கப்பட்டால், அப்போது தக்க யோசனை தெரிவிக்கப்படும்.

"குடும்பக் கட்டுப்பாட்டைக் கருதி, கணவன்—மனைவியராக உள்ள ஆசிரியரையும்-ஆசிரியையும் பிரித்து நெடுந் தொலைவுள்ள ஊர்களுக்கு மாற்றும் அத்தகைய கொடுமைகளை இந்த அரசு செய்யாது."

---

## பணம் படுத்தும் பாடு!

புதுடில்லி, ஜூன் 22—

"கணக்கில் வராத பணம் நிலத்திலும், தங்கத்திலும் முதலீடு செய்யப்படுகிறது; இவைகள்மீது சூதாட்டம் போன்ற பேரங்கள் நடத்துகின்றனர்; இதனைத் தடுக்க, சட்டங்களுக்குட்பட்ட பல நடவடிக்கைகளை அரசு ஆலோசித்து வருகிறது.

"கணக்கில் வராத பணத்தைப் பற்றிய நிலைமையைச் சமாளிப்பதற்கு, 'உயர்ந்த மதிப்புள்ள நோட்டுகள் செல்லாது' என அறிவிப்பது ஒரு வழியாகும். அது பலன் தரவேண்டுமெனில், எவரும் அறியாவண்ணம் அதனைச் செய்யவேண்டும்"

என்று, நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய், கணக்கில் வராத பணத்தினால் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள கடுமையான இடைஞ்சல் பற்றிக் குறிப்பிடுகையில் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"மொரார்ஜி தேசாய், ஏழைகள் குடிக்கும் தேநீருக்கு வரி போட்டிருக்கிருர்; நாமோ, பணக்காரர் குடிக்கும் மதுவுக்கு வரி போட்டிருக்கிறேம்!

"மொரார்ஜி, காலணிக்கு வரி போட்டிருக்கிருர்; நாங்கள், காருக்கு வரி போட்டிருக்கிறேம்!

"அவர், காப்பிக்கு வரி போட்டிருக்கிருர்; நாங்கள், ரெபிரிஜிரேட்டருக்கு வரி போட்டிருக்கிறேம்!

"மத்திய அரசு, ஏழைகளுக்கு வரி போடுகிறது; தமிழக அரசு, பணக்காரர்களுக்கு வரி போட்டிருக்கிறது: இதுதான், நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம்."

சட்டம் படித்த வேழவேந்தனுக்கு—பட்டம் பெறுவதற்கு முன் அவர் படித்த 'தமிழ்', இத்தகைய ஒரு 'விமர்சனப் பாதை'யை அவருக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறது!

சென்னை, அதன் சுற்றுப்புறங்கள், மற்றும் தமிழகத்தின் பெரிய நகரப் பகுதிகளில் விளைநிலங்கள், வீடு கட்டும் மனைகளாக மாற்றப்படுவது குறித்துச் சரியான முறையில் அச்சம் தெரிவித்துப் பேசியிருக்கிருர்—திருப்பெரும்புதூர் தொகுதிக் கழக உறுப்பினர் **டி. இராசரத்தினம்.**

"உணவு உற்பத்தியை அதிகரிக்க ஒவ்வொரு அங்குல விளைநிலமும் பயன்பட வேண்டிய இந்த நேரத்தில், இத்தகைய ஒரு வியாபார முறை பெருகுவது எல்லா வகையிலும் கவலைப் படத்தக்கது" என்ற உண்மையை—உரிய நேரத்தில் அவர் எடுத்துரைத்திருக்கிருர்!

நெய்வேலியிலிருந்து கிடைக்கும் சிறு அளவு உரமும் தனியார் மூலமாக விநியோகிக்கப்படுவது, ஊழல்—பதுக்கல்களுக்கு இடம் அளிப்பதனையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிருர்!

அரிசன மக்கள் முன்னேற்றத்தில் அம்பேத்காரைவிடவும் அண்ணவின் அமைச்சரவை நாட்டம் கொண்டிருப்பதனை, குன்னத்தூர் **எம். கோபாலும்,** கழக ஆட்சியின் நிர்வாகச் சிக்கனத்தை ஆரணி **ஏ. சி. நரசிம்மனும்** பாராட்டிப் பேசியுள்ளனர்.

"அண்ண அறிவித்துள்ள 'சீரணி' ஆட்சியின் நடைமுறைகளை மக்களுக்கு விளக்கி அவர்களை மாநிலத்தின் முன்னேற்றத்துக்கு ஈடுபாடு கொள்ளச் செய்யும் அமைப்பே தவிர அரசியல் நோக்கம் கொண்டதல்ல" என்பதனை, விராலிமலை **வி. எஸ். சண்முகம்** விளக்கியிருக்கின்ருர்.

"கோயில் நிலங்களை ஏழைகளுக்கே நேரடியாகக் குத்தகைக்கு விடவேண்டும்" என்று நிலக்கோட்டை **ஏ. முனியாண்டி** தந்துள்ள யோசனை கவனிக்கத்தக்க ஒன்ருகும்.

கடவுள்கள் பெயரில் உள்ள நிலங்களைக்கொண்டு, தர்மகர்த்தாக்கள் ஆதிக்கம் பெற்றுள்ள ஒரு நிலைக்கு, இந்த மாற்றம் முற்றுப்புள்ளி வைப்பதுடன், நிலமில்லாத ஏழைகளுக்கு உண்மையான வேலை வாய்ப்பு ஏற்படுவதற்கும் உதவும்!

"மின்சார இலாகாவில் ஏற்படும் எவ்விதத் தாமதமும் விவசாய உற்பத்தியைப் பாதிப்பதாக அமையும்" என, உத்திரமேரூர் **கே. எம். இராசகோபால்** தெரிவித்திருப்பது, கிராமப் பகுதிகளில் மின்சார இலாகா நடவடிக்கைகள் விரைவாகப் பரவிவரும் இன்றைய நிலையில் தரப்பட்டிருக்கும் முன்னெச்சரிக்கையான அறிவுரையாகும்.

சர்க்கரை பற்றிய ஒரு கசப்பான உண்மையை, விளாத்திகுளம் **இரத்தினசபாபதி,** தமிழக அரசு மூலமாக மத்திய அரசினரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

கரும்பின் விலையை நாடு முழுவதற்கும் நிர்ணயம் செய்யும் புதுடில்லி, அதிலிருந்து கிடைக்கும் சர்க்கரையைக் கிராமப் புறங்களுக்குக் கிடைக்குமாறு விநியோகம் செய்வதில்லை" என்று அவர் குற்றஞ்சாட்டியிருக்கிருர்.

**"'எங்களைத் தவிர வேறு யாரும் ஆளும் தகுதி படைத்தவர்களல்லர்' என்ற காங்கிரசாரின் வார்த்தைகளைப் பொய்ப்பிக்கும் வகையில்—அனுபவப்பட்ட நிர்வாகியைப்போல் —முதலமைச்சர், பட்ஜெட் தயாரித்திருக்கிருர்"**

என்று சுதந்தரா உறுப்பினர் **ஏ. ஆர். பெருமாள்** கூறியிருப்பதை, 'எங்களைத் தவிர வேறு எந்தக் கட்சி வந்தாலும், நிலையான ஆட்சியைக் கொடுக்க முடியாது' என்று பேசிய முன்ளுள் ஆளுங்கட்சியினருக்குக் காணிக்கையாக வைக்கலாம்!

நீரில் மிதப்பனவற்றை நிலத்தில் வாழவைக்க முடியாது! நிலத்தில் இருப்பனவற்றை நீரில் இருத்திவைக்க முடியாது! இதைப்போலவே, தரையில் இருக்கும் உயிர்வாழ்வனவற்றிலும், நீரில் வசிக்கும் உயிரினங்களிலும் தனித்தனி போக்குடையவைகள் உண்டு!

சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர் பாலசுப்பிரமணியம், "திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு ராஜ்ய கட்சியாக இருப்பதால் பெரிய காரியங்களைச் சாதிக்க முடியாது; ஓர் அகில இந்தியக் கட்சியாகத் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்; கிணற்றுத் தவளையாக இல்லாமல் சமுத்திரத் தவளையாக மாற வேண்டும்" எனக் கூறியிருக்கிருர்.

**அனைத்திந்திய அமைப்பாகவே இருக்கும் அவரது கட்சி எத்தனை பெரிய காரியங்களைச் சாதித்துவிட்டது என்று கேட்டால், என்ன பதிலளிப்பது என்பதை, தமிழகத்தில் மட்டுமே இருக்கும் கழகத்தின் அமைச்சரவையின்முன் நின்றுகொண்டு பேசுகையில் அவர் நினைத்துப் பார்த்திருக்கவேண்டும்!**

'கழகம் ஏன் அனைத்திந்தியக் கட்சியாக மாருது' என்பதனை, தேர்தலுக்குமுன் நண்பர்கள் சங்கம்—சென்னை ஒற்றைவாடை அரங்கில் நடத்திய சிறப்புக் கூட்டத்தில் அண்ண அவர்கள் அறிவித்தது, அவரது பார்வைக்கு ஏனே தென்படாமல் போயிருக்கிறது!


**தவளைக்குக் கிணறுதான்—கிணற்றுக்குத் தவளைதான்!**

**தமிழகத்தில் சோஷலிஸ்டுக் கட்சி சாதிக்க இருந்ததனைத் தடுத்து நிறுத்திவிட்டு, கழகம் ஆட்சிக்கு வந்துவிடவில்லை!**

**பிற மாநிலங்களில் அது சாதிக்க இருந்த பெரிய காரியங்களுக்கும், கழகம் குறுக்கே நின்றதில்லை!**

**அன்பு மிகுதியால்—ஆர்வம் காரணமாக அவர் இந்த ஆசையைத் தெரிவித்திருந்தால் பரவாயில்லை! இல்லையேல், அது சரியில்லை!**


# டான் இந்தியா வாட்டில் எக்ஸ்ட்ராக்ட் தொழிற்சாலை துவக்க விழா



வாட்டில் எக்ஸ்ட்ராக்ட் உற்பத்தி செய்வதற்கு, மேற்கு ஜெர்மனி நாட்டின் BMA ஸ்தாபனத்தாரின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன், மேட்டுப்பாளையத்தில் புதியதாக நிறுவப்பட்டிருக்கும் தொழிற்சாலையை 25-6-67 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு

தமிழக தொழிலமைச்சர்
**திரு. V. R. நெடுஞ்செழியன்** அவர்கள்
துவக்கி வைப்பார்

**ஸ்ரீ. R. வெங்கட்ராமன் M. L. C.** அவர்கள்
தலைமை தாங்குவார்

TAN-INDIA WATTLE EXTRACTS Co. LTD. MADRAS

ELEGANT


# கருநாடகத்தில் கழகத் தோழர்கள் கைது!

பெங்களூர், ஜூன் 24—

தி. மு. கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் உசேன், கருநாடக மாநிலத் தி. மு. க. அமைப்பாளர் திராவிடமணி, மற்றும் கழகத் தோழர்கள் இன்று பெங்களூரில் கைதுசெய்யப்பட்டனர்.

'சட்டமன்றம் நோக்கிச் செல்வோம்' என்ற போராட்டம், பெங்களூரில் நடைபெறவிருக்கிறது. அதையொட்டி, கழகத் தோழர்களைக் கருநாடக மாநில அரசு கைது செய்திருக்கிறது.

இன்று காலை 9-மணிக்கு கழகப் பொதுக்குழு உறுப்பினர் கி. சோழன் கைது செய்யப்பட்டார்.

மற்றுமொரு கழகத் தோழர், கடையில் பணியாற்றிக் கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்டிருக்கிருர்.


## பாலர் அரங்கம்

ஜூன் 25-ந் தேதி மாலை 4-மணிக்கு

**"சிறுவர் கலை நிகழ்ச்சி"**

(சென்னை கஸ்தூரிபாய் கிளப் மாணவ-மாணவிகளால் நடத்தப்படும்)

கட்டணம் வழக்கம்போல்


## அறிஞர் அண்ண தலைமையில் திருமணம்

26—6—67 காலை 9 மணியளவில், திரு. மே.வீ. பார்த்தசாரதியின் செல்வன்: **லோகநாதனுக்கும்,** திரு. செ. எ. பலராமன் செல்வி: **காந்திமதிக்கும்** செங்கற்பட்டு, வேதாசலம் நகர் சீனிவாச திருமண மண்டபத்தில் **அறிஞர் அண்ண** அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, செங்கற்பட்டு மாவட்டத் தி.மு.க. செயலாளர் சி.வி.எம். அண்ணமலை எம்.எல்.ஏ., சி. சிட்டிபாபு எம்.பி., சி.வி. இராசகோபால் எம். எல். சி., கோதண்டம் எம்.எல்.ஏ., முனு ஆதி எம்.எல்.ஏ., கே.எம். இராசகோபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

# சட்டமன்றத்தில் ம. பொ. சிவஞானம் முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மறுத்துவிட்டு—தட்டிக் கழித்துவிட்டு—எதிர்க் கட்சி ஆட்சியினர் மத்திய அரசுமீது வீண் பழி போடுவதாக டெல்லியிலிருந்துகொண்டு ஒரு தலைவர் பேசுவது மிகவும் வருத்தப்படக்கூடிய ஒன்ருகும்!

தமிழகத்தில்தான் தி. மு. கழகம், தனித்து ஆள்கிறது! கேரளத்தில் கம்யூனிஸ்டு ஐக்கிய முன்னணி ஆட்சி—பீகாரில் காங் தீயவழிவந்தவர்களின் ஐக்கிய முன்னணி ஆட்சி—ஆக எல்லா எதிர்க் கட்சி ஆட்சியினரும் ஒரே குரலில்தான் மத்திய ஆட்சியைக் குறை கூறுகிருர்கள் என்ருல், இது அரசியல் சட்டத்தில் உள்ள குறைபாடேயாகும். இந்த ஆதிக்க மனப்பான்மை வெறுக்கத்தக்கதாகும்.

வரவு-செலவுத் திட்டத்தில் சில வரி விதிப்பும், சில வரி விலக்கும் செய்யப்பட்டுள்ளது.

வரி விதிப்பைப் பற்றி இன்று வீதியிலே யாரும் முணுமுணுக்கவில்லை; காரணம், தாங்கக்கூடியவர்கட்குத்தான் வரி விதிக்கப்பட்டிருக்கிறது! சக்தி குறைந்தவர்கட்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது!

வசதி படைத்தவர்களுக்கு வரி விதிக்கப்பட்டிருப்பதற்காக நாம் வருந்த வேண்டிய அவசியமில்லை!

இந்த நிதிநிலை அறிக்கையில், 'சோஷலிசம்' என்ற சொல் தேடிப்பார்த்தாலும் கிடைக்கவில்லை; ஆனல், 'சோஷலிசம்' செயல் உருவமாக்கப்பட்டிருக்கிறது!

## மருத்துவ மனையில் டி. கே. சீனிவாசன்

தோழர் டி. கே. சீனிவாசன் அவர்களது வலதுகையில் வலி அதிகம் ஏற்பட்டுள்ளதால், தஞ்சை அரசினர் மருத்துவமனையில்சேர்க்கப்பட்டு கடந்த 28-5-67 லிருந்து சிகிச்சை பெற்று வருகிருர்.

இன்னும் ஒரு வாரத்தில் தோழர் டி. கே. சீனிவாசன் சிகிச்சை பெற்று இல்லம் திரும்புவார்.

## நர்சுகள் சங்க மாநாடு

### அண்ண கலந்துகொள்கிருர்

தமிழக அரசு நர்சுகள் சங்கத்தின் மாநாடு, 26—6—67 மாலை 6-30 மணிக்கு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்; முதலமைச்சர் அறிஞர் அண்ண அவர்கள் மாநாட்டைத் திறந்துவைப்பார்கள்; திருமதி ஏ. ஆப்ரகாம் தலைமை வகிப்பார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.